ஆவடியில் 496 பேருக்கு ரூ.14 கோடியில் நலத் திட்ட உதவிகள்

அமைச்சர் சா.மு.நாசர் வழங்கினார்

ஆவடியில் நடைபெற்ற மக்கள் தொடர்புத் திட்ட முகாமில் பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கிய அமைச்சர் சா.மு.நாசர்.

ஆவடி, அக். 23: ஆவடியில் நடைபெற்ற மக்கள் தொடர்புத் திட்ட முகாமில் 496 பயனாளிகளுக்கு ரூ.14.53 கோடி மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் சா.மு.நாசர் புதன்கிழமை வழங்கினார்.

திருவள்ளூர் மாவட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் மக்கள் தொடர்புத் திட்ட முகாம் ஆவடி வட்டத்துக்குட்பட்ட பாண்டேஸ்வரம் கிராமத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் த.பிரபு சங்கர் தலைமை வகித்தார். இந்த முகாமை சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் சா.மு.நாசர் தொடங்கி வைத்து, பல்வேறு துறைகள் சார்பில் 496 பயனாளிகளுக்கு ரூ.14.53 கோடி மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர், அமைச்சர் நாசர் பேசியது: முகாமில் 350 பயனாளிகளுக்கு ரூ.14.25 கோடி மதிப்பிலான கிராம நத்தம் பட்டாவும், 22 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டையும், ஊரக வளர்ச்சித் துறை சார்பில் 26 பயனாளிகளுக்கு ரூ.27.60 லட்சம் நலத் திட்ட உதவிகளும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.26,760 மதிப்பிலான தையல் இயந்திரமும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு 61,848 மதிப்பிலான சலவைப் பெட்டி மற்றும் தையல் இயந்திரமும், வேளாண்மைத் துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு வேளாண் உபகரணங்களும் உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பில் 496 பயனாளிகளுக்கு ரூ.14.53 கோடியில் அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

நிகழ்வில் மாதவரம் சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.சுதர்சனம், வருவாய்க் கோட்டாட்சியர் கற்பகம், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் முருகன், ஆவடி வட்டாட்சியர் சசிகலா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மர்மக் காய்ச்சல்: தேர்வறையில் மயங்கி விழுந்து பள்ளி மாணவி உயிரிழப்பு

பவானி, அக். 23: பவானியில் மர்மக் காய்ச்சலால் உடல்நலம் பாதிக்கப்பட்ட மாணவி, பள்ளிக்கு தேர்வு எழுதச் சென்றபோது மயங்கி விழுந்து புதன்கிழமை உயிரிழந்தார்.

ஈரோடு மாவட்டம், பவானி தேவபுரத்தைச் சேர்ந்தவர் முருகானந்தம் - சாந்தி தம்பதி. இவர்களது மகள் ஹரிணி (13), (8-ஆம் வகுப்பு படித்து வந்தார்). மகன் ஹரீஷ் தேவசேனாதிபதி (13). அந்தியூரில் உள்ள தனியார் பள்ளியில் ஆசிரியையாக சாந்தி பணியாற்றி வருகிறார். கடந்த இரு நாள்களுக்கு மேலாக ஹரிணி மர்மக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது. இதனால், பள்ளிக்குச் செல்லாமல் வீட்டிலேயே இருந்துள்ளார்.

இந்நிலையில், மாதாந்திர தேர்வுக்கு மகள் ஹரிணியை, தாய் சாந்தி பள்ளிக்கு புதன்கிழமை அழைத்துச் சென்றுள்ளார். அங்கு, வகுப்பறையில் தேர்வு எழுதிக் கொண்டிருந்தபோது ஹரிணி மயங்கி விழுந்தார். உடனடியாக பள்ளியின் வாகனத்தில் அந்தியூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு, தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் அவர் உயிரிழந்தார். இதுகுறித்து, அந்தியூர் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

பவானியை அடுத்த பருவாச்சி, காட்டூரில் எலிக்காய்ச்சல் பாதிப்பால் கடந்த மாதம் பள்ளி மாணவர் உயிரிழந்தார். அம்மாபேட்டையில் வடமாநிலத் தொழிலாளர்கள் இருவர் எலிக்காய்ச்சலாலும், ஒருவர் டெங்கு காய்ச்சலாலும் பாதிக்கப்பட்டனர். இந்நிலையில், பவானி நகரப் பகுதியில் மர்மக் காய்ச்சல் பாதிப்பால் பள்ளி மாணவி உயிரிழந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

உமறுப்புலவரின் 382-ஆவது பிறந்த நாள்: எட்டயபுரத்தில் எம்.பி., அமைச்சர் மரியாதை

எட்டயபுரத்தில் உள்ள உமறுப்புலவர் நினைவிடத்தில் மலர்ப் போர்வை வைத்து மரியாதை செலுத்திய தூத்துக்குடி எம்.பி. கனிமொழி, அமைச்சர் பெ. கீதாஜீவன். உடன், ஆட்சியர் க. இளம்பகவத், எம்எல்ஏ ஜீ.வி. மார்க்கண்டேயன் உள்ளிட்டோர்.

விளாத்திகுளம், அக். 23: தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில், 'சீறாப்புராணம்' இயற்றிய உமறுப்புலவரின் 382-ஆவது பிறந்த நாள் விழா புதன்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் செய்தி, மக்கள் தொடர்புத் துறை சார்பில், அவரது நினைவிட மணிமண்டபத்தில் நடைபெற்ற விழாவுக்கு, விளாத்திகுளம் பேரவைத் தொகுதி உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன் தலைமை வகித்தார். ஆட்சியர் க. இளம்பகவத், கோவில்பட்டி வருவாய்க் கோட்டாட்சியர் க. மகாலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தூத்துக்குடி மக்களவைத் தொகுதி உறுப்பினர் கனிமொழி, சமூக நலன், மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ. கீதாஜீவன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று, நினைவிடத்தில் மலர்ப் போர்வை வைத்து மலர்கள் தூவி மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து, சிறப்பு துவா ஓதி மதநல்லிணக்க பிரார்த்தனை நடைபெற்றது. உமறுப்புலவர் சங்கத் தலைவர் உ. காஜாமைதீனுக்கு சால்வை அணிவித்து கௌரவித்தனர்.

இபிஎஸ் புகழாரம்

சென்னை, அக். 23: தமிழக இலக்கியத்துக்கு பெரும் பங்காற்றிய உமறுப்புலவரைப் போற்றி வணங்குகிறேன் என்று அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் எக்ஸ் தளத்தில் புதன்கிழமை வெளியிட்ட பதிவு: இறைத்தூதர் முகமது நபியின் வாழ்க்கை வரலாற்றை, 'சீறாப்புராணம்' எனும் காப்பியம் தந்து, செந்தமிழுக்கு வளம் சேர்த்த உமறுப்புலவர் பிறந்த நாளில், தமிழ் இலக்கியத்துக்கு அவர் செய்த சேவைகளை போற்றி வணங்குகிறேன்.

உமறுப்புலவரின் பிறந்தநாள் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டது அதிமுக அரசு என்பதை பெருமையுடன் நினைவுகூர்கிறேன் என்று அவர் தெரிவித்தார்.

பேறு கால இறப்புகளைத் தவிர்க்க புதிய திட்டம்: பொது சுகாதாரத் துறை

சென்னை, அக். 23: பேறு காலத்தில் பல்வேறு உடல் நல அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் கர்ப்பிணிகளைக் கண்டறிந்து அவர்களது பிரசவ சிகிச்சையை பாதுகாப்பாக மேற்கொள்வதற்கான சிறப்புத் திட்டத்தை மக்கள் நல்வாழ்வுத் துறை நடைமுறைப்படுத்தியுள்ளது.

பொது சுகாதாரத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் அந்தத் திட்டத்தின் கீழ், பிரசவத்தை எதிர்நோக்கியிருக்கும் பெண்களின் தரவுகளைச் சேகரித்து அவர்களுக்கு இணை பாதிப்புகள் உள்ளனவா என்பதை அறிந்து ஒருங்கிணைந்த அவசர கால மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல (சீமாங்) மருத்துவ மையங்களில் சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

அதன்படி, நவம்பரில் பிரசவ சிகிச்சைகளுக்கு காத்திருக்கும் 76,473 கர்ப்பிணிகளில் 29 சதவீதம் பேருக்கு உடல் நல அச்சுறுத்தல்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அவர்களை முன்கூட்டியே அருகில் உள்ள சீமாங் மையங்களிலோ அல்லது அவர்கள் விருப்பப்படும் உயர் வசதிகள் கொண்ட தனியார் மருத்துவமனைகளிலோ அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இது தொடர்பாக பொது சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் செல்வவிநாயகம் கூறியதாவது: தமிழகத்தில் மகப்பேறு இறப்புகளைக் கட்டுப்படுத்த பல்வேறு செயல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. தாய் மற்றும் குழந்தைகளின் உயிர் காக்கும் உயர் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

அதன் தொடர்ச்சியாக தற்போது இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

பொதுவாகவே பேறு காலத்தில் உயிழப்பு நேரிடுவதற்கு பிரசவத்துக்கு பிந்தைய அதீத ரத்தப்போக்கு, உயர் ரத்த அழுத்த பாதிப்புகள், ரத்தத்தில் கிருமித் தொற்று, இதய பாதிப்பு மற்றும் பல்வேறு நோய்கள் முக்கிய காரணமாக உள்ளன.

இதைக் கருத்தில் கொண்டு மாநிலம் முழுவதும் உள்ள கர்ப்பிணிகளில் இணை நோய்கள் உள்ளவர்கள், பிரசவ கால உடல் நல பாதிப்புகளுக்கு ஆளானவர்கள், பேறு கால சர்க்கரை நோயாளிகளைக் கண்டறிந்து சீமாங் மையங்களுக்கு அனுப்பி வருகிறோம்.

அதற்காக அனைத்து மருத்துவக் கட்டமைப்புகளிலும் ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழகம் முழுவதும் 129 சீமாங் மையங்கள் உள்ளன. அங்கு 24 மணி நேரமும் மகப்பேறு மருத்துவர்கள், அவசரகால மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் உள்ளனர்.

அத்தகைய இடங்களில் உடல் நல அச்சுறுத்தல் உள்ள கர்ப்பிணிகளை அனுமதிக்கும்போது அவர்களுக்கான இடர் வாய்ப்புகள் குறைந்து பாதுகாப்பான பிரசவம் உறுதி செய்யப்படுகிறது.

'பிக்மி' எனப்படும் கர்ப்பிணிகள் பதிவு தளத்தில் முன்கூட்டியே பிரசவ அச்சுறுத்தல் உள்ளவர்களின் விவரங்களை பதிவேற்றி, சம்பந்தப்பட்ட சீமாங் மையங்களுக்கு தகவல் அளிக்கப்படும். அதன் வாயிலாக அனைத்து ஏற்பாடுகளும் தாமதமின்றி மேற்கொள்ளப்படும் என்றார் அவர்.

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
திருவண்ணாமலை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒ.அ.எண். 22/ 2024 - 25 / தவஅ / நாள்: 21.10.2024

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ). க(ம)ப. திருவண்ணாமலை வட்டம் அவர்களால், சி.ஆர்.ஐ.டி.பி 2024-25 மற்றும் பராஞ்மன்ற உறுப்பினர்களின் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டப்பணிகள் 2023-24 திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை மற்றும் வேலூர் (நெ). க(ம)ப. கோட்டங்களைச் சார்ந்த 3 பணிகளுக்கு இரு உறைமுறையிலும், திருவண்ணாமலை (நெ). க(ம)ப. கோட்டத்தைச் சார்ந்த 1 பணிக்கு ஒரு உறைமுறையிலும் (4 பணிகளுக்கு) இணைய வழி மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 12.11.2024 அன்று 12.00 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, இணையவழி முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 25.10.2024 முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ /4444/ ஒப்பந்தப்புள்ளி / 2024

கண்காணிப்புப் பொறியாளர் (நெ).
க(ம)ப. வட்டம். திருவண்ணாமலை

HDB FINANCIAL SERVICES

HDB :.பைனான்சியல் சர்வீசஸ் லிட்.

பதிவு அலுவலகம்: ராதிகா, 2வது தளம், லா கார்டன் சாலை, நவ்ரங்புரா, அஹமதாபாத் - 09.

கிளை அலுவலகம்: M/s. HDB :.பைனான்சியல் சர்வீசஸ் லிட். பழைய எண். 64, புதிய எண். 84, 'A' பிளாக், MNO வளாகம், HDB டவர்ஸ் 1வது தளம், கிரீம்ஸ் சாலை, சென்னை - 600006.

E-ஏல விற்பனை அறிவிப்பு

(கடன்தாரர் / சுவட்டு விண்ணப்பதாரர் / பொதுமக்கள் ஆகியோருக்கு) (SARFAESI சட்டம் 2002, விதி 8(6) அதனுடன் விதி 9(1) ஆகியவற்றின் கீழ்)

கீழே கையொப்பமிட்டுள்ள HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன்படி பின்வரும் சொத்தை "உள்ளது இடத்தில் மற்றும் உள்ளது உள்ளபடி" எனும் அடிப்படையில் விற்பனை செய்வதற்கான உரிமையுடன் கீழ்க்காணும் கடன் கணக்கில் பேரில் சுவாதீனம் செய்துள்ளார்.

விண்ணப்பதாரர் / கூட்டு விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி: 1. நவீன் ஸ்டோர்ஸ், எண். 804 TH சாலை, திருவொற்றியூர், சென்னை-600019. 2. பத்மாவதி MG பழைய எண். 67, M. புதிய எண். 7/1 கிராமத் தெரு, திருவொற்றியூர், சென்னை-600019. 3. மதுலைநாடார் கனகராஜ், எண். 67 M, புதிய எண். 7/1 கிராமத் தெரு, திருவொற்றியூர், சென்னை-600019. 4. நவீன் ஸ்டோர்ஸ், கதவு எண். 7/1/67M சடையன்குப்பம் பாட்டை, திருவொற்றியூர், சென்னை-600019., கணக்கு எண்: 1789163, மொத்த நிலுவைத் தொகை: 23.10.24 நாள்படி ரூ.5,06,10,706.21 (ரூபாய் ஐந்து கோடியே ஆறுலட்சத்து பத்தாயிரத்து எழுநூற்றாறு மற்றும் பைசா இருபத்தொண்று மட்டும்) அத்துடன் முழுத்தொகை செலுத்தப்படும் நாள் வரையிலான மேல் வட்டி / இடைநிகழ் செலவுகள் / செலவினங்கள் உட்பட. நடு பெற்றுக் கடனளித்தவருக்குத் தெரிந்து ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின் அவற்றின் விவரங்கள்: --- ஏதும் இல்லை

அசையாச் சொத்துக்களின் விவரங்கள்: கடனீட்டுச் சொத்துக்களின் அட்டவணை I:- இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய சொத்து முகவரி வீடு, தரைத்தளம் மற்றும் வளாகம். மனை எண் 2, கிராமத் தெரு, சடையன்குப்பம் பாட்டை, திருவொற்றியூர், சென்னை-600019. சர்வே எண் 341 பாகம், 339/2 மற்றும் 237 பாகம், TS எண் 133/2, பிளாக் எண் 8, வார்டு எண் H, சர்வே எண் 339/1a பாகம், பட்டாப்படி. இது திருவொற்றியூர் சார்பதிவு மாவட்டம் மற்றும் வடசென்னை பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. சொத்தின் பரப்பு: 2769 சதுர அடி. எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: மனை எண் 3, தெற்கு: மனை எண் 1, கிழக்கு: சடையன்குப்பம் கேட், மேற்கு: மனை எண் 17.

குறைந்தபட்ச விலை	டேவணித் தொகை (EMD)	ஏல உயர்வுத் தொகை	ஏல நாள் மற்றும் நேரம்	டேவணித்தொகை (EMD) செலுத்தக் கடைசி நாள் மற்றும் நேரம்
ரூ.1,74,24,900/-	ரூ.17,42,490/-	ரூ.1,00,000/-	13.11.2024 அன்று முற்பகல் 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை	12.11.2024 அன்று மாலை 05.00 மணி வரை

ஏல விற்பனையானது 'இணைய வழி e-ஏல' முறையில் https://www.bankeauctions.com இணையத்தளத்தில் மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாட்களில் எண்ணிக்கை வரம்பற்ற 5 நிமிடக் கால நீட்டிப்பு வசதியுடன் நடைபெறும்.

ஏல விற்பனையுடன் சுவடிய ஒப்பந்தப்புள்ளியின் விதிகள் மற்றும் நிபந்தனைகள்:

1) விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்களது டேவணித்தொகையை வலைதளம் https://www.bankeauctions.com மூலம் பயனாளி அடையாளம் மற்றும் கடவுச்சொல் வாயிலாக சமர்ப்பிக்க வேண்டும். (பயனாளி அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை தங்களது பெயரை வலைதளம் https://www.bankeauctions.com ல் பதிவு செய்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்). அடிப்படை விலையின் 10% தொகையை டேவணித்தொகையாக பே ஆர்டர் மூலம் / "HDB Financial Service Limited" என்ற பெயருக்கு எடுக்கப்பட்ட கேட்பு வரைரோலை மூலம் செலுத்த வேண்டும். ஏலதாரரால் வலைதளத்தில் தம்மை பதிவு (ஒரு முறை) செய்த பிறகு, விருப்பமுள்ள ஏலதாரர் / வாங்குபவர் பின்வரும் ஆவணங்களில் நகல்களை, விலைப்புள்ளி ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரத்துக்கு முன்பு வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். அவையாவன: I). NEFT/ RTGS சலான் அல்லது கேட்பு வரைவோலை நகல்; II). நிரந்தர கணக்கு அட்டை.; III). அடையாள சான்று / முகவரி சான்று (KYC) அதாவது வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / கடவுச்சீட்டு போன்றவை இவையன்றி வரும் விலைப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். முறையாக நிரப்பப்பட்டு, கையொப்பமிட்ட பிற்சேர்க்கை II & III ஆகியவற்றின் ஒளிவருடப்பட்டு பதிவேற்றம் செய்யப்படும் நகல்களை வலைதளம் https://www.bankeauctions.com லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 2) உள்ளுழை அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்குவதிலோ, தகவல்களை பதிவேற்றம் செய்வதிலோ விலைப்புள்ளி ஆவணங்களை சமர்ப்பிப்பதிலோ, பயிற்சி / ஆன்லைன் உள்ளூரு விலைகோரலுக்கான செய்முறை விளக்கம் பெறுவதிலோ உதவி தேவைப்படும் விருப்பமுள்ள ஏலதாரர்கள், M/s. C1 India Pvt Ltd., உத்யோக் விஹார், ஃபேஸ் 2, கல்ஃப் பெட்ரோகெம் பில்டிங், பில்டிங் எண்.301, குர்கான், ஹரியானா-122015 மின்னஞ்சல் முகவரி - support@bankeauctions.com, உதவிக்கான எண்கள் - 124 4302020/21/22/23, 7291981124 / 1125 / 1126, விற்பனை விசாரணைகளுக்கு - sales@bankeauctions.com, 7291981129 யை தொடர்பு கொள்ளலாம். 3) ஏலத்திற்கு விருப்பமுள்ள ஏலதாரர்கள் நேரில் ஆஜராகி தனிப்பட்ட முறையில் பங்கேற்று, எழுத்து பூர்வமாக அவர் தனக்காக விலைகோருகிறார் என எழுத்து பூர்வமாக அறிவிக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட நபர் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. 4) விருப்பமுள்ள ஏலதாரர்கள், அதிகாரப்பூர்வ அலுவலர், M/s. HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., பழைய எண். 64, புதிய எண். 84, A-பிளாக், M.N.O. வளாகம், HDB டவர்ஸ், 1வது தளம், கிரீம்ஸ் சாலை, சென்னை-600006 அவர்களிடமிருந்து விலைப்புள்ளி படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். ஏலம் நடைபெறும் இடம் : M/s. HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., பழைய எண். 64, புதிய எண். 84, A-பிளாக், M.N.O. வளாகம், HDB டவர்ஸ், 1வது தளம், கிரீம்ஸ் சாலை, சென்னை-600006. 5) விருப்பமுள்ள ஏலதாரர்கள், தங்களது விலைப்புள்ளிகளை உரிய விலைப்புள்ளி படிவத்தில் நிரப்பி, முத்திரையிட்ட உறையிலிட்டு, அதிகாரப்பூர்வ அலுவலர், HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிட்டெட் - க்கு முத்திரையிட்டு, அடிப்படை விலையின் 10% யை "HDB Financial Service Limited" என்ற பெயருக்கு எடுக்கப்பட்ட பே ஆர்டர் / கேட்பு வரைவோலையாக எடுக்கப்பட்ட டேவணித்தொகையுடன், இத்துடன் அறிவிக்கப்பட்ட விலைப்புள்ளி மற்றும் ஏல விற்பனை தேதியான 12.11.2024 அன்று மாலை 05.00 மணி அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும்.6) சொத்து மற்றும் இதர விபரங்களை ஆய்வு செய்ய, வாங்க விருப்பமுள்ள நபர்கள், M/s. HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., பழைய எண். 64, புதிய எண். 84, A-பிளாக், M.N.O. வளாகம், HDB டவர்ஸ், 1வது தளம், கிரீம்ஸ் சாலை, சென்னை-600006, M/s. HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., பழைய எண். 64, புதிய எண். 84, A-பிளாக், M.N.O. வளாகம், HDB டவர்ஸ், 1வது தளம், கிரீம்ஸ் சாலை, சென்னை-600006 - K சண்முகம் (9597065780), S கோபி - (98844 51533) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். சொத்து/க்கள் "இருக்கின்ற இடத்தில்" மற்றும் "இருக்கின்ற நிலையில்" என்ற அடிப்படையில் விற்கப்படுகின்றன.7) முத்திரையிட்ட விலைப்புள்ளிகள், விருப்பமுள்ள ஏலதாரர்கள் முன்னிலையில், இத்துடன் அறிவிக்கப்பட்ட விலைப்புள்ளி மற்றும் ஏல விற்பனை தேதியான 13.11.2024 அன்று காலை 11.00 மணிக்கு திறக்கப்படும். பொதுவாக விற்பனையானது மூடிய விலைப்புள்ளிகளின் வாயிலாக நடைபெறும் போதிலும், அதிகாரப்பூர்வ அலுவலர், தனது சொந்த அதிகாரத்தின் பேரில், மூடிய விலைப்புள்ளிகளாக வரப்பெற்ற விலைப்புள்ளியை விட அதிகமாக விலை கோர விளையும், விருப்பமுள்ள ஏலதாரர்கள் மத்தியில் திறந்த வெளி ஏலம் நடத்தலாம்., அவ்வாறு நடைபெறும் போது, விற்பனை அதிகபட்ச விலைகோரும் நபருக்கே உறுதிப்படுத்தப்படும். எனினும், விற்பனை HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிட்டெட்-ன் உறுதிப்படுத்தலுக்கு கட்டுப்பட்டதாகும். 8) வெற்றி பெற்ற ஏலதாரர், விற்பனை உறுதிப்படுத்தப்பட்டதன் பேரில், விற்பனை தொகையின் 25% யை (டேவணித்தொகை உட்பட) உடனடியாக அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மிறி தாமதமாகாமல் செலுத்த வேண்டும்., மீதி 75% தொகையை விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும்., தவறும் பட்சத்தில், தொடக்கத்தில் செலுத்திய 25% தொகை அபராதமாக கருதி கழிக்கப்படும். எக்காரணத்தைக்கொண்டும் அத்தொகை திருப்பித்தரப்படமாட்டாது. வெற்றி பெற்ற ஏலதாரர், மேற்சொன்னவாறு, மொத்த ஏலத்தொகையில் 25% செலுத்த தவறும் பட்சத்தில், அடுத்த வெற்றி பெற்ற ஏலதாரர் பரிசீலிக்கப்படுவதோடு, அவர் விற்பனையை முடிக்க உரிமையுடையவராவார். 9) விற்பனைச்சான்று, அதிகாரப்பூர்வ அலுவலரால், வாங்குவதில் வெற்றி பெற்றவர் பெயரில் மட்டுமே, விற்பனைத்தொகையை, இதில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள், முழுமையாக செலுத்தப்பட்ட பிறகே வழங்கப்படும்.10) வாங்குவதில் வெற்றி பெற்றவரே பரிமாற்றத்துக்கு சட்டப்படி பொருந்தத்தக்கவாறு, செலுத்தப்பட வேண்டிய முத்திரை தீர்வை, பதிவு கட்டணம் போன்ற கட்டணங்கள் / செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.11) சட்ட ரீதியில் செலுத்த வேண்டிய (சட்டப்படியிலான வீட்டு வரி, மின் கட்டணங்கள் மற்றும் இதர நிலுவைகள்) TDS, GST போன்றவற்றை ஏதேனும் அரசுக்கோ அரசு நிறுவனத்துக்கோ உள்ளாட்சி அமைப்புக்களுக்கோ செலுத்த வேண்டியிருப்பின் அவற்றை வெற்றி பெற்ற ஏலதாரர் செலுத்த வேண்டும்.12) அதிகாரப்பூர்வ அலுவலர், எக்காரணமும் கூறாமல், விலைப்புள்ளி அல்லது ஏலப்புள்ளிகளில் ஏதேனும் அல்லது அனைத்தையும் ஏற்றுக்கொள்ள அல்லது ரத்து செய்யவும், ஏலத்தை ஒத்தி வைக்க / தள்ளி வைக்க / ரத்து செய்யவும், எக்காரணமும் கூறாமல், விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றவும், எந்த முன் அறிவிப்புமின்றி, விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றவும் உண்டான அதிகாரத்தை தன்னகத்தே வைத்துள்ளவராவார்.

இடம்: சென்னை, நாள்: 24.10.2024 ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், M/s. HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்.

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

(முன்னர் சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)

பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006.
இணையதளம் : www.tvsholdings.com தொலைபேசி : 044 - 28332115 மின்னஞ்சல் : corpsec@tvsholdings.com
CIN : L35999TN1962PLC004792

30 செப்டெம்பர் 2024 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தனித்த மற்றும் ஒருங்கிணைத்த நிதிநிலை முடிவுகள்

(ரூ. கோடிகளில்)

வ. எண்	விவரங்கள்	தனித்தது			ஒருங்கிணைந்தது		
		முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு	முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு
		30.09.2024	30.09.2023	31.03.2024	30.09.2024	30.09.2023	31.03.2024
		(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்பட்டது)	(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்பட்டது)
1	மொத்த வருமானம்	56.55	484.59	1,646.56	11,562.24	10,619.78	40,282.02
2	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	16.17	98.38	415.19	901.37	727.68	2,791.49
3	விதிவிலக்கான வகைகளுக்குப் பின் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	16.17	96.64	410.12	901.37	725.94	2,786.42
4	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்)	12.44	82.98	338.74	598.81	457.31	1,782.38
5	நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் / (நஷ்டம்) மற்றும் (வரிக்குப் பின்) இதர விரிவான வருமானம்]	12.56	82.54	336.08	676.89	469.04	1,728.28
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொரு பங்கிற்கும் ரூ.5/-)	10.12	10.12	10.12	10.12	10.12	10.12
7	ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக)			1,439.45			2,829.95
8	பங்குகளின் பிரீமியம் கணக்கு	36.44	36.42	36.42	36.44	36.42	36.42
9	நிகர மதிப்பு	1,465.99	1,405.98	1,440.37	3,100.40	2,403.32	2,619.28
10	நிதிநிலையில் உள்ள கடன் (மாற்ற முடியாத திருப்பி எடுக்கக்கூடிய விருப்ப பங்குகளை தவிர்த்து)	643.64	-	550.00	27,261.45	-	26,232.48
11	நிதிநிலையில் உள்ள திருப்பி எடுக்கக்கூடிய முன்னுரிமை பங்குகள்	-	873.03	-	-	873.03	-
12	கடன் சம விகிதாசாரம் (விதிவிலக்கான வகைகள் உட்பட)	0.37	NA	0.31	7.06	3.44	8.24
13	பங்கு ஒன்றிற்கான சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.5/- ஒரு பங்குக்கு) (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை)						
	(அ) அடிப்படை (ரூபாயில்)	6.15	41.01	167.43	137.54	112.65	395.60
	(ஆ) டைல்யூட்டட் (ரூபாயில்)	6.15	41.01	167.43	137.54	112.65	395.60
14	மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு	NA					
15	மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு	NA					
16	கடன் சேவை அளிப்பு விகிதாசாரம் (மடங்கு)	NA	N